www.lkedu.lk

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு - 2020

தொடர்பாடல் ஊடகக் கற்கை - I | **29** | **T** | **I**

நேரம்
2.00 மணித்தியாலம்

சுட்டெண் :

தொகுப்பு :
து. துலக்சி
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

குறிப்பு :

- 01 - 30 வரையான வினாக்கள் கட்டாயமானவை. (இரு பாடத்திட்டத்திற்கும் பொதுவானது)
- 31 - 50 வரையான வினாக்கள் புதிய பாடத்திட்ட மாணவர்களுக்குக் கட்டாயமானவை. 51 - 70 வரையான வினாக்கள் பழைய பாடத்திட்ட மாணவர்களுக்குக் கட்டாயமானவை.

சரியான / மிகப்பொருத்தமான விடையைத் தெரிக.

01. தொடர்பாடல் கற்கைத்துறை பற்றிக் கற்பதால்
(1) சமூக முன்னேற்றத்தில் பங்களிப்பு
(2) ஆய்வு மற்றும் விமர்சன ரீதியான சிந்தனை
(3) விமர்சன ரீதியாக ஊடகத்தை நுகரும் ஆற்றல்
(4) இடைத்தொடர்பு விருத்தி
(5) படைப்பாக்க ரீதியான சிந்தனையுடன் ஊடக எதிர் தகவல் உருவாக்கம்

www.lkedu.lk

02. சமூகத் தொடர்புகள் உருவாவதற்கு அடிப்படையான தொடர்பாடல்
(1) குழுத் தொடர்பாடல் (2) ஆளிடைத் தொடர்பாடல்
(3) சமூகத் தொடர்பாடல் (4) வெகுஜனத் தொடர்பாடல்
(5) ஆளுள் தொடர்பாடல்

03. தகவலானது இலத்திரனியல் செயற்பாட்டிற்கு உள்ளாகிச் சமிக்ஞையாக மாற்றப்படல்
(1) ஷெனன் மற்றும் வீவர் மாதிரி (2) ஒஸ்கூட் மற்றும் ஸ்ராம் மாதிரி
(3) அரிஸ்டோட்டில் மாதிரி (4) லாஸ்வெல் மாதிரி
(5) வில்பர் ஸ்ராம் மாதிரி

04. சமூக உபயோகத்தன்மை காணக்கிடைக்கக் கூடியது
(1) பொதுசனத் தொடர்பாடல் (2) சமூகத் தொடர்பாடல்
(3) வெகுஜனத் தொடர்பாடல் (4) குழுத் தொடர்பாடல்
(5) ஆளிடைத் தொடர்பாடல்

05. நாட்டார் கதைகளின் இயல்புகள் அல்லாதது
(1) சமூக அறிவு உள்ளடக்கப்பட்டிருத்தல்
(2) அறிவைப் பரிமாற்றும் முறை
(3) பிரதேச மொழிநடை மட்டுமே காணப்படல்
(4) உளத்திருப்தியை ஏற்படுத்தல்
(5) கிராம மக்களின் பண்பாடு இங்கு பரிமாறப்படும்

தமிழ்ச்சங்கம் – பேராதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

06. தன்னகத்தொடர்பாடலுடன் பொருத்தமானது

(1) சுயபார்வை (2) வழிகாட்டல் (3) குறைகூறல்

(4) ஆலோசனை வழங்கல் (5) எச்சரிக்கை விடுத்தல்

07. தொடர்பாடல் என்பது

(1) அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபட்டது

(2) தகவல் பரிமாற்றமாகும்

(3) சிறந்த தொடர்பாடல் சமூக முரண்பாடுகளைக் கழையும்

(4) அறிந்ததை அறியப்படுத்தல்

(5) அச்சியந்திர வளர்ச்சியுடன் தகவல் பரிமாற்றம் துரிதமடைந்தது.

08. "தகவல் அடங்கிய குறியீடுகளைக் கொண்டு இரு தரப்பினருக்கும் ஒருமித்த மனநிலையை ஏற்படுத்துவது" தொடர்பாடல் எனக் குறிப்பிட்டவர்

(1) வில்பர் ஸ்ராம் (2) சார்ஸ் எச். கூலி (3) லாஸ்வெல்

(4) ஷெனோன்வீவர் (5) ஒக்ஸ்பேர் அகராதி

09. தகவல்களை வழங்குதல் தொடர்புபட்டமைவது

(1) கட்டுருவாக்க ஊடகப் பிரதிநிதித்துவத்துடன்

(2) அழகியல் ஊடகப் பிரதிநிதித்துவத்துடன்

(3) சமூக ஊடகப் பிரதிநிதித்துவத்துடன்

(4) அறிவுசார் ஊடகப் பிரதிநிதித்துவத்துடன்

(5) அரசியல் கருத்து ஊடகப் பிரதிநிதித்துவத்துடன்

www.lkedu.lk

10. உடனடிப் பின்னூட்டல் இடம்பெறுவது

(1) கூட்டுத்தொடர்பாடல் (2) மக்கள் தொடர்பாடல்

(3) நபரிடைத் தொடர்பாடல் (4) உள்ளகத் தொடர்பாடல்

(5) தனியாள் தொடர்பாடல்

11. தொடர்பாடல் செயன்முறையில் தடையுடன் சார்பற்றது

(1) பண்பாடு (2) விளைவு (3) மொழி (4) கருவி (5) கருத்து

12. பெறுநர் பற்றிய சரியான கூற்று

(1) இரு நபர்கள் இல்லாத பட்சத்தில் பெறுநர் காணப்படமாட்டார்

(2) பெறுநரின் இரசனைப் பகுதி பரந்து காணப்படல்

(3) பெறுநர் வகிபங்கு மாற்றப்படாது

(4) பெறுநர் விளங்கறிவு சமனாக இருக்கமாட்டாது

(5) வியாக்கியானம் செய்யும் திறன்களை எப்போதும் பெறுநர் கொண்டிருப்பார்

13. வெகுஜன ஊடகத்தின் செயற்பாடுகளுள் தொடர்பல்லாதது

(1) விரைவானதும் தொடர்ச்சியானதும்

(2) தொழில்சார் தொடர்பாடுநர்கள் காணப்படல்

(3) பிந்திய குறிமுறையாக்கல் செயற்பாடு

(4) இலாபத்தை இலக்காகக் கொண்டது

(5) நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டது

தமிழ்தினம் – பேராதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

14. வானொலி ஊடகமானது

(1) ஒருவழித் தொடர்பாடல்

(2) சிக்கலான தொழில்நுட்பத்துடன் கூடியது

(3) மனக்காட்சி ஒன்றை நேயர்கள் உருவாக்கலாம்

(4) முழு வலயத்தையும் உள்ளடக்கும்

(5) குறுகிய வாக்கிய அமைப்பு

15. ஊடகத்தில் இடம்பெறும் விமர்சனமானது மதிப்பீட்டாளருக்கு முக்கியமாகும் சந்தர்ப்பம்

(1) பண்புசார் பின்னூட்டத்திற்கான வாய்ப்பு உருவாதல்

(2) படைப்பிற்குப் பிரபல்யத்தைத் தருகின்றது

(3) மதிப்பீட்டாளருடன் போட்டியிடும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது

(4) உடனடிப் பின்னூட்டத்தை நாளாந்தம் தருகின்றது.

(5) பெறுநர் மத்தியில் நல்லுறவைக் கொண்டுள்ளது

16. பூகோளமயமாதல் செயற்பாட்டால் இலங்கையின் வெகுஜனத் தொடர்புத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் அல்லாதது

(1) வெகுஜன ஊடகங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(2) வெகுஜன ஊடகம் ஒன்றிணைந்த தொகுதியாக மாற்றமடைதல்

(3) தேசிய பிராந்திய தனித்துவம் வலுப்பெறல்

(4) பூகோள வெகுஜனத் தொடர்புத்துறை முக்கியம் பெறல்

(5) பரந்துபட்ட செய்தி தொடர்பின் முக்கியத்துவம்

www.lkedu.lk

17. கமல் மாலாவின் எண்ணத்தை எதிர்க்கின்றான். ஆனால் அந்த எண்ணத்தில் மாலா கொண்டிருக்கும் உரிமைக்காக உண்மையாக அவள் எண்ணத்தை நிறைவேற்ற முன்வருகிறான். இக்கூற்றால் அறியப்படுவது

(1) நியாயமான உரிமை

(2) சகோதரத்துவத்தின் பெறுமதி

(3) ஆழ்பரிவு

(4) கருத்து வேறுபாட்டின் முக்கியத்துவம்

(5) ஐக்கிய ஒற்றுமையின் முக்கியத்துவம்

18. தீபாவிற்குச் சினிமா ஊடகத்தை விமர்சனம் செய்யும் திறமை உண்டு. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. சிறு குழுக்களில் அத்திறமையை வெளிப்படுத்துவாள். ஆகவே,

(1) விழிப்புணர்வுமிக்க பெறுநர்
(2) மந்தப் பெறுநர்
(3) செயற்படா பெறுநர்
(4) விழிப்புணர்வற்ற பெறுநர்
(5) செயற்படு பெறுநர்

19. அபிவிருத்தி தொடர்பாடல் மாதிரிகளின் உருவாக்கத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய அடிப்படை அம்சம்

(1) பின்னூட்ட செயன்முறை

(2) மாதிரியின் சிக்கல் தன்மை

(3) தகவல் மூலம்

(4) வன்செய்தி

(5) பெறுநர் மட்டும்

தமிழ்மொழி மூலம் மட்டுமே பரீட்சை வழிகாட்டி

www.lkedu.lk

20. "ரவி தனது அதீத திறமைகள் தொடர்பில் நம்பிக்கை கொண்டுள்ளான். ஏதோ ஒரு நிகழ்வில் உலகில் புதியதொரு சாதனையாளனாக வரமுடியும் என அவனின் பெற்றோர்கள் அவனிடம் கூறியிருந்தனர். அந்தக் கனவு ஒரு நாளில் உண்மையாக மாறியது" எனச் செய்தியாளர் சந்திப்பொன்றில் மகிழ்ச்சியுடன் கூறினான். இவ்வாக்கியம் பிரதிபலிப்பது

(1) அவனது தனியாள் தொடர்பாடலின் திறன்
(2) உள்ளுணர்வுடன் கூடிய தொடர்பாடல்
(3) அவனது ஒன்றுபட்ட முயற்சியின் திறமை
(4) அவனது சுய எண்ணக்கரு பற்றிய உணர்வு
(5) அனுபவக்கள வெற்றி

21. இலக்கியம், கலாச்சாரதூது, புத்தாக்க முயற்சி, வர்த்தகத் தொடர்பு, தேசிய சமய கலை நிகழ்வுகள் ஊடாக நடைபெறுவது

(1) பண்பாட்டு இணைப்பு
(2) மோதல் தவிர்ப்பு
(3) பண்பாட்டுப் பரிமாற்றம்
(4) பண்பாட்டுச் சீர்திருத்தம்
(5) பண்பாட்டுப் புத்தாக்கச் செயற்பாடு

22. தொலைக்காட்சி ஒன்றில் ஒலிபரப்பாகிய நிகழ்ச்சி ஒன்றின் கதையை விமர்சித்தல் செயன்முறையானது ஊடக விமர்சன ரீதியாக

(1) நிகழ்ச்சி எழுத்தாளனை விமர்சித்தல்
(2) ஊடக உள்ளடக்கத்தை விமர்சித்தல்
(3) ஊடக தொகுப்பாளனை விமர்சித்தல்
(4) ஊடக தயாரிப்பை விமர்சித்தல்
(5) ஊடக தாக்கத்தை விமர்சித்தல்

23. அறிவு சமூகமொன்றில் ஊடக விமர்சனப் போக்கின் முக்கியத்துவம் பற்றிய தொடர்பற்ற கூற்று

(1) ஊடக மேலதிக மொழி பிரயோக நிலைக்கு
(2) பயனாளிகளை விழிப்புணர்விற்கு இட்டுச்செல்ல
(3) ஊடக சமூக இடைத்தொடர்பை விளங்க
(4) ஊடக உள்ளடக்கம், தயாரிப்பை விளங்க
(5) ஊடக ஆய்வு விரிவாக்கத்திற்கு

24. ஐரோப்பாவில் இடம்பெற்ற கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் ஒரு எண்ணக்கருவாக வடிவம் பெற்றது

(1) வெகுசனத் தொடர்பு
(2) பொதுமக்கள் தொடர்பு
(3) சமூகத் தொடர்பு
(4) அச்சியந்திர எண்ணக்கரு
(5) கைத்தொழில் சாலைகள்

25. தற்போதைய உலகில் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியிடம் இருக்கவேண்டிய பண்புகள் அல்லாதது

(1) கவர்ச்சிகரமான பேச்சினால் பெறுநரை அணுகல்
(2) முன்வைக்கும் திறன்
(3) பக்கச்சார்பின்றிய ஆளுமை
(4) கருத்துக்களை கேட்டு மதிப்பளித்தல்
(5) பொதுசன தொடர்பற்ற ஆய்வை மேற்கொள்ளல்

26. புத்தாக்கப் பரவலாக்கக் கோட்பாடு முன்வைக்கப்பட்டது

(1) 1962 (2) 1972 (3) 1961 (4) 1965 (5) 1963

தமிழ் மூலம் மாதிரி வினாத்தாள்கள்

www.lkedu.lk

27. இருவழித் தொடர்பாடலில் செயற்படுத்தப்படும் வினைத்திறன் மிக்க பொதுசன தொடர்பு உபகரணங்கள் அல்லாதது

(1) வீடியோக் கருத்தரங்கு
(2) இலத்திரனியல் ஊடக சஞ்சிகை
(3) செய்மதி ஊடக வெளியீடு
(4) வீடியோ செய்தி வெளியீடு
(5) ஸ்கைப் செய்தி

28. உறவுமுறையின் மீது உருவாக்கப்படும் பண்பாடு

(1) தேசிய பண்பாடு
(2) வெகுஜன பண்பாடு
(3) இனப் பண்பாடு
(4) நாட்டார் பண்பாடு
(5) கலாசார கிராமிய பண்பாடு

29. "ஒவ்வொரு அம்சத்திற்குரிய பொருத்தமான தகவலை ஒன்றாக்கல்" ஞாபகப்படுத்தல் செயன்முறையில் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) தகவல் கோர்த்தல்
(2) மீட்டல்
(3) எண்ணக்கருபடவாக்கம்
(4) தகவல் ஒழுங்கமைப்பு
(5) சட்டகத்தில் உள்ளடக்கல்

30. சலன ஊடக விதியானது

(1) ஒலி - ஒளி ஊடகம்
(2) வேறுபட்ட முறையில் பயன்படுத்தப்படும் ஊடகம்
(3) சினிமா இருளுடன் தொடர்புடைய ஊடகமாகும்
(4) பல்வேறு மாதிரி மற்றும் வடிவங்கள் பாரம்பரியத்துடன் அமைகின்றது
(5) சினிமா மொழியானது ஒரு அடையாளத்துடனான நுணுக்க தொகுதியாகும்.

www.lkedu.lk

புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கானது

31. HUB மாதிரியில் வெகுஜனத் தொடர்பாடல் செயற்பாட்டில் தொடர்புபடும் கூறுகள்

(1) வடிகட்டி
(2) குறிமுறைகள்
(3) ஒழுங்காக்கி
(4) ஊடக விஸ்தீரணம்
(5) மின்னஞ்சல் பின்னூட்டல்

32. மெய்நிகர் தொடர்பாடலானது சமகாலப் பூகோளப் போக்கின் ஒரு சந்தர்ப்பமாகும். இத்தொடர்பாடலின் இயல்புகளுள் அடங்காதது

(1) இதன் பிரதான உபகரணம் இணையத்தளம்
(2) திறமையாகத் தொடர்பாடலில் ஈடுபடும் செயல்
(3) பாதுகாப்பாக ஒலி, ஒளி அம்சங்களுடன் தொடர்பற்றது
(4) கைத்தொலைபேசி ஊடாகத் தகவல்கள் பெறல்
(5) தகவல், தொடர்பாடல் தகவல் தொழில்நுட்பத்தால் மத்தியஸ்தம் செய்யப்படும்

33. அளிக்கை மூலம் பல கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. இதன் செயற்பாடுகளுடன் தொடர்புபடாதது

(1) ஓர் செயற்பாடாக மற்றும் தொழிற்துறையாக மட்டும் நடிப்பில் ஈடுபடல்
(2) நடிப்பின் மூலம் தொடர்பாடல் பணிகள் நடைபெறும்
(3) அளிக்கை சந்தர்ப்பத்தை ஆய்வு செய்யும்
(4) வெவ்வேறு தொடர்பாடல் சந்தர்ப்பங்களை முன்வைத்தல்
(5) மனித வாழ்க்கையில் அனைத்து தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கும் அவசியம்

தமிழ்மொழி மூலம் மட்டுமே பயன்படுத்தப்படும்

www.lkedu.lk

34. புதிய ஊடகத்தின் வளர்ச்சிப் பரிணாமங்களுள் தொடர்பில்லாதது

(1) இராணுவத்துறைக்குத் தேவையான தகவல்களைப் பரிமாறிக்கொள்ள எடுத்த முயற்சியின் பெறுபேறாகத் தோன்றியது

(2) எண்சார் தொழில்நுட்பம் வரை விருத்தியடைந்துள்ளது

(3) டீம் பேர்னர்ஸ் லீ இனால் மின்னஞ்சல் இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் வளர்ச்சி துரிதமானது

(4) தரவுத்தளம்

(5) தானியங்கி மற்றும் வலையமைப்பாதல்

35. இன்ஸ்டகிராமின் (Instagram) இயல்புகள்

(1) படம், காணொளிகளைப் பகிர்தல்

(2) சமூக ஊடகமாகும்

(3) நிழற்படப் பகிர்விற்காகப் பயன்படுத்தக்கூடியது

(4) பிரசித்திபெற்ற வலைத்தளங்களுடன் மட்டும் தொடர்புடையது

(5) கூடுதலாக முகநூல் பாவனையாளர்களர் பயன்படுத்தப்படுகின்றது

36. "செவ்வியலானது மனித பண்பாட்டின் விசேட பிரிவொன்றாகும்" இதன் பண்பாட்டு அம்சங்களாவன

(1) உருவாக்கப்படுவது அதற்குரிய விசேட அறிவினைக் கொண்ட நபர்களாலாகும்

(2) வெகுசன பண்பாட்டிற்கு ஈடான உயர் ஒழுக்க விழுமியங்களைக் கொண்டுள்ளது

(3) மனித சமூகத்தின் பரிணாமத்தின் அனைத்து மட்டங்களுடனும் தொடர்புபடுவது

(4) அறிவுசார்ந்த ஆற்றலைக் கொண்டுள்ளது

(5) அறிவு, ஒழுக்கம் உயர்நிலையில் காணப்படல்

www.lkedu.lk

37. ஊடக விளங்கறிவு என்பதன் ஊடாக வளர்க்கப்படும் ஆற்றல்களைக் கொண்ட தொகுதி

A. எழுத்துக்களை எழுதவும் வாசிக்கவுமான கற்றலாகும்.

B. சிக்கலான வசனங்களை இனங்காணல்

C. தகவல்களை வாசித்து அவற்றை விளங்கிக்கொள்ளல்

D. இது வெகுஜன ஊட்கத்தின் பரவலால் ஓர் பாடமாகப் பரிணாமம் பெற்றது

E. பேச்சு வல்லமையும், இலக்கமற்றதாக்கல், எழுத்தைக் கோர்த்து வாசிக்கவும் உடையதான ஆற்றல்

(1) A யும் B யும்

(2) A யும் C யும்

(3) அனைத்தும் சரி

(4) A யும் D யும் E யும்

(5) A, B, C, D ஆகியன

38. ஊடக தகவல்களை விமர்சன ரீதியாக விளங்கிக்கொள்வதற்கு ஊடக விளங்கறிவு அவசியமானதாகும். அவ்வாறான ஊடக விளங்கறிவின் பிழையான மதிப்பீட்டினைத் தெரிக.

(1) ஊடகங்களையும் இணையத்தளங்களையும் எண்சாரா ஊடகங்களையும் ஆய்வு செய்தல்

(2) ஊடகத்தில் செயற்றிறன் மிக்க வகையில் செயற்படல்

(3) ஊடகங்களில் நுழைதல்

(4) ஊடகங்களை மதிப்பிடல்

(5) ஊடக உள்ளடக்க உருவாக்கம்

தமிழ்மன்றம் - தேர்தலைப் பல்லைக்காட்டும்

www.lkedu.lk

39. யதார்த்தத்தைப் பற்றிய தவறான கூற்று

(1) தொடர்பாடல் தொடர்ந்து நடைபெறல்

(2) அர்த்தங்கள் பெறுநரிடத்தே தோற்றம் பெறுகின்றது

(3) தொடர்பாடல் அடிப்படையில் இருவழி செயற்பாடு

(4) வசனங்களில் விசேடமான அர்த்தங்கள் காணப்படல்

(5) தகவல்கள் சிக்கல் மிக்கதாக மாற்றமடையும்

40. விமர்சன ரீதியான பெறுநர் கொண்டிருக்க வேண்டிய திறன்கள் அல்லாதது

(1) ஊடக தகவலில் மறைக்கப்பட்ட அங்கங்களைத் தெளிவுபடுத்தல்

(2) ஊடகத் தகவலில் குறைநிலைகளைத் தேடியறிதல்

(3) ஊடக தகவலின் ஊடாகக் கருதுகோள்களை அனுமானித்துக் குறைவடையச் செய்தல்.

(4) புதிய தொகுப்பொன்றை உருவாக்கல்

(5) ஊடக மையம் மற்றும் விடயங்களைச் சுருக்கமாக விளக்கல்

41. சினிமா ஊடகத்தின் தனித்துவ அம்சங்களில் அடங்காதது

(1) இந்த ஊடகத்திற்கே தனித்துவமான மொழி, இலக்கணம் வளர்ச்சியடைந்துள்ளன.

(2) மெய்யியல் அடிப்படையிலான ஓர் ஊடகம் எனலாம்.

(3) இதன் தொழிற்றுறைகளானது நடைமுறைத்தன்மை கொண்டவை.

(4) படைப்பாக்க கற்கையில் திரைப்படக் கற்கை பொது உரிமை.

(5) செவ்வியற்றன்மை சினிமாத் தொழிற்றுறையின் பிரதான அம்சம்.

42. பொதுசன தொடர்பின் இருவழிச் சமச்சீர் மாதிரி

(1) எதிர்மறையான தாக்கம் குறைவடைந்ததால் ஒழுக்க விழுமியம் உருவானமை

(2) முரண்பாடு தீர்வு, கலந்துரையாடல் முன்னேற்றம் அடைதல்

(3) ஜனநாயக தேவை ஏற்படல்

(4) பெறுநரிடையே புரிந்துணர்வைப் பூர்த்திசெய்ய வேண்டிய தேவை ஏற்படல்

(5) பொதுமக்கள் தொடர்புத்துறை வினைத்திறனான துறையாக மாறியமை

43. சமூகத் தொடர்பு சமத்துவத்தின் கூறுகள் பற்றிய சரியான கருத்துத் தொகுதி

A. வர்க்கப் பாகுபாட்டைத் தவிர்த்தல்

B. சிறப்பு மனித உரிமைகள் ஏற்படுத்தல்

C. குறைந்த தேவைகளைப் பூர்த்திசெய்தல்

D. அபிவிருத்தி சந்தர்ப்பம் சமம்

E. காரணியின் அடிப்படையில் வேறுபாடு ஏற்படுத்தல்

(1) A யும் B யும் (2) A யும் D யும் (3) A யும் E யும் C யும்

(4) அனைத்தும் சரி (5) A, C, D, E மட்டும்

44. மக்பிறைட் ஆணைக்குழுவானது ஒரு ஊடக உருவாக்கத்திற்கான செயற்பாடாகும். இதன் செயற்பாடுகளாகக் கருத முடியாதது

(1) பூகோள ஊடக சித்தரிப்பை எளிமைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

(2) உலக தொடர்பாடலின் சமமான தன்மை மற்றும் முரண்பாடுகள் அக்காலத்தில் அவதானத்தைப் பெற்றது

(3) 1970களின் பின்னரைப் பகுதியில் தோற்றம் பெற்றது

(4) சீன மக்பிறைட்டினால் யுனோஸ்கோ அமைப்பால் உருவாக்கப்பட்டது

(5) பூகோள தொடர்பாடலைச் சித்திரித்தது

தமிழ்மன்றம் – போராடுவோம் மகிழ்ந்திருப்போம்

www.lkedu.lk

45. ஊடக சுதந்திரம் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படாத அம்சம்

(1) தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் 19ம் திருத்தத்தால் ஏற்படுத்தப்பட்டது

(2) 1948 இல் இடம்பெற்ற மனித உரிமைப் பிரகடனத்தால் 'வெளியீட்டு சுதந்திரம்' வரவிலக்கணப்படுத்தப்பட்டது.

(3) கணினி, இணையம் ஆகியவற்றின் வருகையால் ஊடக சுதந்திரம் சவாலுக்குட்பட்டது

(4) தாம் விரும்பிய கருத்தை மட்டும் பெறுநருக்கு வழங்கல்

(5) புதிய ஊடகத்தின் வளர்ச்சியால் ஒத்த தன்மையான கருத்தியல்கள் உருவாகியது

46. வெகுஜன ஊடகத் தணிக்கைச் செயற்பாட்டுடன் தொடர்பற்றது

(1) வெகுஜன ஊடக தொழிற்றுறையின் முக்கிய எண்ணக்கரு

(2) அரசுடன் இணைந்து ஊடக நிறுவனங்கள் தணிக்கைச் செயற்பாட்டை ஏற்படுத்தும்

(3) ஊடக வரையறை ஊடக கொள்கையுடன் தொடர்புடையவை

(4) தணிக்கை ஊடகங்களிற்கேற்ப வேறுபட்ட தனித்துவத்துடன் காணப்படுகின்றது

(5) கூடுதலாக இருவழிப் போக்குடன் செயற்படும்.

47. இலங்கையில் ஊடக வளர்ச்சியின் கட்டங்களுள் உள்ளடக்கப்பட முடியாத அம்சம்

(1) 1970களின் முற்பகுதியில் தொலைக்காட்சி தோற்றம் பெற்றது.

(2) 1982 இல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உருவானது

(3) காலணித்துவ காலத்தில் திரைப்படங்கள் அரச திரைப்படப் பிரிவினால் உருவாக்கப்பட்டன.

(4) 1979 இல் சுயாதீன தொலைக்காட்சி சேவை தோன்றியது

(5) தொலைக்காட்சி புதிய பண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

www.lkedu.lk

48. இலங்கை தொடர்பாடல் துறையின் நவீன மொழிபெயர்ப்பாளர்

(1) தொலைக்காட்சி (2) இணையத்தளம் (3) முகப்புத்தகம்

(4) மின்னஞ்சல் (5) ருவீட்டர்

49. இலங்கை ஊடகங்களின் தற்போதைய நிறுவன ரீதியான போக்குகள்

(1) சுயாதீன ஊடகவியலாளர்களிற்கு மேலதிகமாக நிரந்தர ஊடகவியலாளர்களின் அதிகரிப்பு

(2) பிரதேச ஊடகங்களின் அதிகரிப்பு

(3) அரச ஊடகத்தின் பங்குகள் குறைவடைதல்

(4) ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ச்சியான அதிகரிப்பு

(5) பால் சமநிலையற்ற நிலை காணப்படல்

50. தொடர்பாடல் துறையில் பிரச்சினையை இனங்காணும் சந்தர்ப்பம் அடங்கிய சரியான விடைத்தொகுதி

A. சமூக ஊடக பாவனை

B. வானொலி ஊடக செவிமடுத்தல்

C. தொலைபேசி புறக்கணிப்பு

D. அச்சு ஊடகப் பாவனை

E. தொலைக்காட்சியைப் பார்வையிடாமை

(1) A யும் B யும் C யும் (2) A யும் D யும் (3) A யும் E யும் C யும்

(4) A யும் E யும் (5) A யும் B யும் D யும்

தமிழ்மொழி மூலம் மாத்திரம்

www.lkedu.lk

பழைய பாடத்திட்ட மாணவர்களுக்கானது

51. நீங்கள் ஒரு உண்மையான செய்திக்குத் தலைப்பை இடுவதற்குக் குறைந்தளவில் தேவைப்படும் தகவல்

(1) சம்பவம் நடந்த நேரம் மற்றும் நடந்த விதம்

(2) சம்பவம் நடந்த விதம் மற்றும் காரணம்

(3) என்ன சம்பவம் அதற்கான காரணம்

(4) சம்பவத்துடன் தொடர்புடைய நபர் மற்றும் காரணம்

(5) சம்பவத்துடன் தொடர்புடைய நபர் மற்றும் நடந்த இடம்

52. 'கலாசாரம் என்பது, அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்காறு என்பவற்றை உள்ளடக்குவதோடு சமூகத்தில் ஒரு உறுப்பினராக மனிதன் கொண்டிருக்கக்கூடிய திறன், பழக்கவழக்கம் ஆகிய அனைத்தும் கொண்ட சிக்கலான ஒன்றாகும்' கலாசாரம் குறித்த இந்த வரவிலக்கணத்தைத் தந்தவர்

(1) ரால்ட் லின்ரன் (2) எட்வேட் சபீர் (3) எட்வேர்ட் ரெய்லர்

(4) சாள்ஸ் ஒஸ்கூட் (5) காஸ்பர் மாலினோவுஸ்கி

53. ஊடக கலாசாரமும் சமூக மாற்றமும் பற்றிய கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.

A. ஊடக கலாசாரத்தின் நிமித்தம் செயற்படும் சமூக மாற்றத்தினால் கலாசார மோதல்கள் ஏற்படுகின்றன.

B. சமூகத்தின் உணர்வுபூர்வமான விடயங்கள் மீது ஊடககலாசாரம் மேலோட்டமான தாக்கத்தையே செலுத்துகின்றன.

C. சிறுவர், இளைஞர், பெண்களின் நடத்தைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

(1) A, B, C அனைத்தும் (2) A யும் C யும் மட்டும் (3) A மட்டும்

(4) B யும் C யும் மட்டும் (5) B மட்டும்

54. மொழியின் பண்பாட்டு வடிவத்தில் உரையும் ஒன்றாகும். உரைவடிவத்தின் பண்பாக அமைவது

(1) சுயமாகவே காணப்படுகின்றது

(2) கருத்து நன்கு எறிவு செய்யப்படும்

(3) தனியாட்களுக்கிடையில் நல்லுறவைப் பேணல்

(4) தனிப்பட்ட நோக்கும் கருத்தும் வெளியிடப்படுதல்

(5) தருணத்திற்கேற்ப பேச்சுக்கோலம், ரிதம், வேகம், முன்வைப்புப் போன்ற சிறப்பியல்பு உண்டு

55. சமூக சந்தைப்படுத்தல் விளம்பரங்கள்

(1) பிரசித்த பண்பாட்டின் (Popular culture) ஒரு விளைவு

(2) அபிவிருத்திசார் தொடர்பாடலின் ஒரு பயன்பாடு

(3) ஒரு சமூக ஜனநாயக தொடர்பாடல் செயற்பாடு

(4) சமூக வலைப்பின்னலில் சந்தைப்படுத்தலில் தொடர்புடையது

(5) சமூக வலைப்பின்னலின் தொடர்பாடலின் ஒரு விளைவு

56. சமூக ஒற்றுமைக்குப் பயன்படும் பண்பாட்டுப் போக்கு

(1) பண்பாட்டு சுற்றோட்டம் (2) பண்பாட்டு மாறா எண்ணக்கரு

(3) பண்பாட்டு அதிர்வு (4) பண்பாட்டுப் பரிமாற்றம்

(5) பண்பாட்டுப் பரவுகை

தமிழ்மன்றம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

57. ஊடக கலாசாரம் - வர்த்தக செயன்முறை ஆகியவற்றுடன் தொடர்புபடாத அம்சம்

(1) ஊடக கலாசாரத்தைத் தீர்மானிப்பதில் வர்த்தக செயன்முறை இரண்டாம் நிலையில் செல்வாக்குச் செலுத்துகின்றது

(2) ஊடக கலாசாரம் வர்த்தகத்தின் கீழ் செல்வாக்குச் செலுத்தல்

(3) வர்த்தகத்திற்கு அப்பால் ஊடகங்களிற்கு சுயாதீன நிலைப்பாடு கிடையாது

(4) ஊடக உள்ளடக்கம் வர்த்தக ஆதிக்கத்திற்கு உட்பட்டுச் செம்மைப்படுத்தப்படுகின்றது.

(5) ஊடக கலாசாரத்தைத் தேவைக்கு ஏற்ப கையாள வர்த்தக செயன்முறையால் முடியும்.

58. சமூக தொடர்பாடல் செயன்முறையில் ஏற்படக்கூடிய பாதிப்பு

(1) சமூக தலைமைத்துவம் விரிவடைதல் (2) மொழி ஆளுமை விருத்தியடையும்

(3) வெற்றிகரமான தொடர்பை முன்னெடுக்கலாம் (4) சமூக அந்தஸ்து விரிவடையும்

(5) தனித்துவங்களை இழக்க நேரிடும்

59. மொழியின் பயன்நிலைகளில் பிரதியாக்கமும் ஒன்றாகும். பின்வரும் கூற்றுக்களில் பிரதியாக்க செயன்முறை செயற்பாட்டுடன் தொடர்புபட்டமையாதது

(1) பிரதியாக்க வடிவங்கள் நவீன ஊடகங்களால் மாற்றமடைந்துள்ளன

(2) பிரதியாக்கம் என்பது, எழுத்துக்களைக் கோர்த்து எழுதுதல்

(3) பிரதியாக்கம் ஒன்றிற்குக் குறித்த நோக்கம் உண்டு

(4) மொழி இலக்கணம், குறியீடுகள் பிரதியாக்கத்திற்கு அடிப்படையானது

(5) பிரதியாக்கம் பல வடிவங்களில் உள்ளன

60. மொழிசார் மரபுகள், விதிகள், இலக்கணங்கள், நியதிகள் அவசியமாக அமைவது

(1) உரையாடலில் (2) பேச்சில் (3) பிரதி எழுத்தாக்கத்தில்

(4) ஆற்றுகையில் (5) விபரணத்தில்

61. நிறுவனச் செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற முரண்பாடு பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது

(1) தகவல் முரண்பாடு (2) கட்டமைப்பு முரண்பாடு

(3) தவறான நடத்தை முரண்பாடு (4) தேவை முரண்பாடு

(5) மூல நிறுவன முரண்பாடு

62. பேசுதல் செயன்முறையின் போது பின்பற்றவேண்டிய பண்புக் கூறுகளாக அமைவன

(1) மொழிநடை, கருத்தியல் (2) கருத்தியல், வேகம்

(3) மொழிநடை, பொருத்தமான மரபு (4) சந்தம், வேகம் மற்றும் மொழிநடை

(5) மொழிநடை, பொருத்தமான மரபு

63. மோதல் முக்கோணியில் கல்டுங் சூழமைவு, உளப்பாங்கு, நடத்தை ஆகிய மூலக்கூறுகளை உள்ளடக்கியுள்ளார். மேற்படி மூலக்கூறுகளுடன் தொடர்புடைய காரணி

(1) தாக்குதல், பதவி, பயம் (2) உணவு, சந்தேகம், அச்சம்

(3) நிலம், நம்பிக்கை, தாக்குதல் (4) எண்ணெய், சண்டை, பயம்

(5) வாதப்பிரதிவாதம், பணம், வெறுப்பு

64. வெகுசன ஊடக விமர்சனத்தில் அதியுச்ச பகுதியாக அமைவது

(1) வெகுசன ஊடக அமைப்புக்கள் (2) வெகுசன ஊடகப் பெறுநர்

(3) பத்திரிகையாளர்கள் (4) வெகுசன ஊடக உரிமையாளர்கள்

(5) வெகுசன ஊடகச் செய்தி

தமிழ்மொழி மூலம் – பேரிலை மாகலைக்கழகம்

www.lkedu.lk

65. பிரபல்யமான கலாசார பகுப்பாய்வில் பிரதானமாகக் கவனம் செலுத்தப்படாதது

(1) அழகியல்துறை (2) அளவறிதுறை (3) கலாசார ஆதிக்கதுறை
(4) பொதுமக்கள் பண்பாட்டுத்துறை (5) மேலாதிக்க எண்ணக்கரு துறை

66. சமூக இசைவாக்கச் செயன்முறை எண்ணக்கருக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதில் சமூக இசைவாக்க செயன்முறையை இனங்காணுவதற்கு வேண்டிய எண்ணக்கருவைத் தெரிவுசெய்க.

A. போலி நடிப்பு **B.** இனங்காணல் **C.** முரண்பாடு **D.** பாத்திரமேற்று நடித்தரல் **E.** சமமின்மை

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D
(4) C, D, E (5) A, B, C, D, E அனைத்தும்

67. சமூகத் தொடர்பாடல் செயன்முறையால் ஏற்படக்கூடிய பாதிப்பு

(1) சமூக தலைமைத்துவம் விரிவடையும்
(2) சமூக அந்தஸ்து விரிவடைந்து திரிபடைதல்
(3) மொழி ஆளுமை விருத்தியடைதல்
(4) சமூக முன்னேற்றம் ஏற்படல்
(5) தனித்துவங்களை இழக்க நேரிடல்

68. முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக ஒரு தொகுதி மாணவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் பின்வருமாறு

ராகுல் : முரண்பாட்டை நேர்முறையில் அணுகுதல்
சுசி : முரண்பாட்டை உடன்பாடான நிலைக்கு இட்டுச்செல்லல்
அபி : முரண்பாட்டை மறுத்தலுக்கு உட்படுத்தல்
தனு : முரண்பாட்டினைப் பயங்கர நிலை அழிவுமட்டம் நோக்கி நகர்த்தல்
லக்சி : முரண்பாட்டு சூழ்நிலையை ஆக்கபூர்வமான நிலைக்கு நகர்த்தல்

மேற்படி முரண்பாட்டு முகாமைத்துவ எண்ணக்கரு தொடர்பில் சரியான இயல்பு நிலைகளை வெளியிட்டவர்கள்

(1) ராகுல் மற்றும் அபி (2) ராகுல், அபி மற்றும் லக்சி
(3) ராகுல், சுசி மற்றும் அபி (4) சுசி, அபி மற்றும் தனு
(5) சுசி, அபி, தனு மற்றும் லக்சி

69. 'ஊடகங்களின் செயற்பாடுகளை விஞ்ஞான முறையூடாக ஆராய்கின்ற செய்முறை ஊடக ஆய்வுக்கு உட்பட்டதாகும்.' பகுப்பாய்வின் ஊடாக இனங்காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்

(1) தகவல் சேகரித்தல் (2) தகவல் பகுப்பாய்வு
(3) மதிப்பீட்டுச் செயன்முறை (4) பிரச்சினை இனங்காணல்
(5) முன்மொழிவுகள்

70. சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும் வகையில் முரண்பாடுகளைப் பயன்படுத்தக்கூடியதாக அமையும் வழிமுறை

(1) மத்தியஸ்தம்
(2) ஒடுக்குதல்
(3) தீர்வு
(4) முகாமைத்துவம்
(5) நிலைமாற்றல்

(50x2 = 100 புள்ளிகள்)

தமிழ் மூலம் – போதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு - 2020

தொடர்பாடல் ஊடகக் கற்கை - II | **29** | **T** | **II** | நேரம் : 3.00 மணித்தியாலம்

குறிப்பு :

- 1ம் வினா புதிய, பழைய பாடத்திட்டத்திற்குக் கட்டாயமானது.
- புதிய பாடத்திட்ட மாணவர்கள், வினா 02 - வினா 06 இல் விரும்பிய 04 வினாக்களுக்கும் பழைய பாடத்திட்ட மாணவர்கள் வினா 07 - வினா 11 இல் விரும்பிய 04 வினாக்களுக்கும் விடையளிக்க.

---

01. தொடர்பாடல் செயன்முறையில் தொழில்நுட்ப உபகரணம் பயன்படுத்தப்பட்டாலும் அவற்றைக் கையாள்வது மனிதனே. தொடர்பாடல் கற்கையில் மனிதமனம், நடத்தையைக் கற்றல் முக்கியம் பெறுகின்றன.

(i) எவ் அம்சத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடல் வகைப்பிரிப்பு இடம்பெற்றுள்ளது? அத்தகைய தொடர்பாடல் வகைகளைக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) தன்னகத் தொடர்பாடல் செயலொழுங்கைப் பாதிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு, 02 இற்கு சிறுவிளக்கம் தருக. **(04 புள்ளிகள்)**

(iii) நவீள ஊடகங்களில் கட்புல தொடர்பாடல் இடம்பெறுகின்ற விதத்தினை 04 எடுத்துக்காட்டுக்களுடன் விபரிக்க. **(06 புள்ளிகள்)**

(iv) வெகுஜன ஊடகங்களின் செயற்பாட்டால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை 04 அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை வரைக. **(08 புள்ளிகள்)**

☝ ***புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கானது***

02. "தொடர்பாடல் துறை அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாடல் கற்கைத்துறையை விருத்திசெய்துள்ளன"

(i) பின்வரும் அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட கோட்பாட்டாக்கங்களைக் குறிப்பிடுக.

1. சார்ள்ஸ் ஹேர்டன்கூலி
2. வோல்டர் லிப்மன்
3. ஜோன்டூவி

(02 புள்ளிகள்)

(ii) சிறுவர்கள் வன்முறையுடன் கூடிய கார்டூன் நிகழ்ச்சியைப் பார்வையிடுவதால் ஏற்படும் மாற்றங்கள் 03 ஐக் குறிப்பிட்டு விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iii) இலங்கையில் தொடர்பாடல் கற்கைத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் 03 ஐக் குறிப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iv) தொடர்பாடலானது ஓர் துறைசார் கற்கையாக வளர்ச்சி பெறுவதில் ஊடகச் செயற்பாடுகள் செலுத்தும் தாக்கம் 04 ஐக் குறிப்பிட்டு விளக்குக. **(08 புள்ளிகள்)**

03. தொடர்பாடலை விளங்கிக்கொள்ளவும் அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவும் அதன் உள்ளார்ந்த செயற்பாட்டின் தெளிவான அறிவு அவசியமாகும்.

(i) தகவல்களைக் கடத்தும் போது ஏற்படும் தடைகள் 06 ஐக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) வெகுஜனத் தொடர்பாடல் பற்றிய HUB மாதிரியில் தொடர்புபடும் கூறுகள் 06 ஐக் குறிப்பிட்டு 02 ஐ விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iii) சமகால தொழில்நுட்ப வளர்ச்சி செயற்பாட்டால் ஏற்பட்ட தொடர்பாடலைக் குறிப்பிட்டு அதன் சிறப்பம்சங்கள் 03 ஐ விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iv) மக்கள் கூட்டம் குழுவாகச் செயற்படுகின்ற சந்தர்ப்பங்கள் 05 ஐக் குறிப்பிட்டு அத்தொடர்பாடலில் அவதானிக்கக்கூடிய தனித்துவ அம்சங்கள் 04 ஐ விளக்குக. **(08 புள்ளிகள்)**

www.lkedu.lk
தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

04. பாரம்பரிய ஊடகமானது சூழல் நேயமிக்க, எளிமையான தொடர்பாடல் முறையாகும். ஆனால் கண்ணுக்கு எட்டாத பெறுநர்களுக்குத் தகவல் வழங்குவது வெகுஜன ஊடகமாகும்.

(i) பாரம்பரிய ஊடகங்களின் சிறப்பியல்புகள் 04 ஐக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) வெகுஜன ஊடகத்தின் பண்புகள் 06 குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) தொழில்நுட்ப வளர்ச்சியால் எண்சார் ஊடகத்தின் வருகை வெகுஜன ஊடகங்களை எவ்வாறு வகைப்படுத்தி வேறு வழியில் கொண்டுசென்றுள்ளது எனச் சிறு கட்டுரை வரைக. **(06 புள்ளிகள்)**

(iv) ஊடகங்களின் வளர்ச்சியானது சமூகத்தின் வீழ்ச்சிக்கும் சீரழிவுக்கும் காரணமாகியுள்ளன. ஆராய்க. **(08 புள்ளிகள்)**

05. ஊடக விளங்கறிவானது வெகுஜன ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படும் தகவலை விளங்கவும், அவற்றைப் பயன்படுத்துவதற்கான தேர்ச்சி ஆற்றல் ஆகும்.

(i) ஊடக விளங்கறிவு கல்வி பற்றி அறிஞர்கள் தெரிவித்த வரைவிலக்கணங்கள் 02 குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) உயர் ஊடக விளங்கறிவை ஏற்படுத்த அவசியமான செயற்பாடுகள் 04 குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) படைப்பாக்க தொடர்பாடல் 03 ஐப் பயன்படுத்தி வெகுஜன ஊடகமொன்றிற்குச் செய்தியொன்றைத் தயாரிக்குக. **(06 புள்ளிகள்)**

(iv) தொடர்பாடல் கொள்கையை வரைவிலக்கணப்படுத்தி அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைத் தெளிவாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

06. தணிக்கை என்பது வெகுஜன ஊடகக் கொள்கைகளில் அதிகம் விவாதிக்கப்படுத் ஒரு துறை.

(i) ஊடகத் தணிக்கை நிறுவனங்களின் செயற்பாடுகள் 04 குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) ஊடகத் தணிக்கையின் அடிப்படைப் பிரவேசம் 04 ஐக் குறிப்பிட்டு சிறுவிளக்கம் தருக. **(04 புள்ளிகள்)**

(iii) தற்போது இலங்கையில் பெறுநர்களை மையப்படுத்தி ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள போக்குகள் 03 ஐக் குறிப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iv) இலங்கையில் தற்போது ஊடக உள்ளடக்கங்கள் புதிய போக்கை அடைந்துள்ளன. இவ் ஊடக உள்ளடக்கங்கள் 04 ஐக் குறிப்பிட்டுத் தெளிவாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

☝ ***பழைய பாடத்திட்ட மாணவர்களுக்கானது***

07. "சமூகத்திலுள்ள மக்களுக்கு இடையில் இடைத்தொடர்பை ஏற்படுத்தும் கருவியாகத் தொடர்பாடல் ஊடகங்கள் விளங்குகின்றன"

(i) சமூக மயமாக்கத்திற்குரிய காரணிகள் 04 ஐப் பெயரிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) "சமூக அமைப்பானது மாற்றமடையாத அமைப்பாகும்" இக்கூற்றின் உண்மைத் தன்மையை ஆராய்க. **(04 புள்ளிகள்)**

(iii) "உலவங்கி அறிவுசமூகம் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்தது" இந்நிறுவனத்தால் சுட்டிக்காட்டப்படுகின்ற அறிவு சமூகம் தங்கியுள்ள 04 பிரதான விடயங்களைப் பெயரிட்டு 03 ஐ விபரிக்க. **(06 புள்ளிகள்)**

(iv) பூகோள செயன்முறையால் இலங்கை சமூகத்தில் ஏற்பட்ட தாக்கம் 04 ஐ குறிப்பிட்டு விளக்குக. **(08 புள்ளிகள்)**

08. "மனிதன் வரலாற்றிற்கு முந்தய காலம் தொட்டே அன்றாட சமூகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தொடர்பாடலில் ஈடுபட்டுள்ளான்."

(i) எழுத்துமூல தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் மாதிரிகள் 05 ஐக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) கலீ மற்றும் லெதர்ஸ் கூறிய வாய்மொழியல்லாத தொடர்பாடல் ஆற்றும் பணிகள் 04 ஐக் குறிப்பிட்டு 02 ஐ சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

www.lkedu.lk
தமிழ்மூலம் – முதலாம் பிரதிகள்

www.lkedu.lk

(iii) சமூக கட்டமைப்பில் காணப்படும் அதிகார மையங்களுக்குச் சவால்விட வெகுஜன ஊடகங்களால் முடியும். இக்கூற்றை ஆராய்க. **(06 புள்ளிகள்)**

(iv) குடிமை ஊடகங்கள் மூலம் குடிசார் வாழ்வின் பண்புத்தரமானது ஊட்டம் பெறுகின்றது. இதற்கான 04 உதாரணங்கள் தந்து விளக்குக. **(08 புள்ளிகள்)**

09. "ஆளுமை விருத்தியானது ஒருவரது தனிப்பட்ட வாழ்விற்கும் தொழில்சார் வாழ்விற்கும் முக்கியத்துவம் வாய்ந்தது"

(i) ஒரு தனிநபர் கேட்டற் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கான காரணம் 04 ஐக் குறிப்பிட்டு, கேட்டல் தேர்ச்சியை விருத்தியாக்கும் படிமுறைகளை ஒழுங்காகத் தருக. **(02 புள்ளிகள்)**

(ii) தகவல்களை நாம் தொடர்ந்து ஞாபகத்தில் வைத்திருப்பதற்கான உத்திகள் 04 ஐக் குறிப்பிட்டு, 03 இற்குச் சிறுவிளக்கம் கொடுக்க. **(04 புள்ளிகள்)**

(iii) அனுசரணையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையின் கீழ் நடைபெறும். இவ் அனுசரணை பொதுமக்கள் தொடர்பிற்கு எவ்வாறான தாக்கத்தைச் செலுத்துகின்றது என 03 அம்சங்களைக் கொண்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iv) பொறுப்புவாய்ந்த பிரஜை என்ற அடிப்படையில் கூட்டாக வாழும் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் தொடர்பாடல் செயன்முறைகளையும் ஜெகுஜன ஊடக அறிக்கையிடல்களையும் மேற்கொள்ளும் 04 வழிமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. **(08 புள்ளிகள்)**

10. ஆசிய, ஆபிரிக்க வலய கலாசார பெறுமானம் புறக்கணிக்கப்பட்டுள்ளமையும் மேலைத்தேச கலாசாரம் உயர்வாக மதிக்கப்பட்டுள்ளதும் ஊடக கலாசாரத்தின் பின்னணியிலே.

(i) வெளிநாட்டு கலாசார அம்சங்கள் உள்நாட்டு கலாசார அம்சங்களை ஆக்கிரமித்துள்ளது. இதற்கான 04 உதாரணங்களைக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ii) ஊடக கலாசார சுற்றோட்டத்தின் சமமின்மையால் கீழைத்தேய வாதம் நிந்திக்கப்படுகின்றது. இதற்கும் மேலைத்தேசத்தின் போலி நடத்தைகளிற்கும் இடையேயான தொடர்பை ஆராய்க. **(04 புள்ளிகள்)**

(iii) ஊடக கலாசாரத்திற்கு முனைப்பாகச் செல்வாக்குச் செலுத்தும் ஊடகங்களைக் குறிப்பிட்டு அவற்றிற்கும் தொழில்நுட்பத்திற்கும் இடையேயான தொடர்பை ஆராய்க. **(06 புள்ளிகள்)**

(iv) நிகழ்கால ஊடக வன்முறையை அடிப்படையாகக் கொண்டு ஊடகக் கல்வியறிவின் அவசியத்தை 04 அம்சங்களை அடிப்படையாக வைத்து விளக்குக. **(08 புள்ளிகள்)**

11. சமூக அடிப்படையிலும் சமாதானம் மற்றும் சுகவாழ்விற்குப் பிரசித்தமான உபகரணமாகப் பிரயோகிக்கப்படுவது தொடர்பாடல் ஆகும்.

(i) சமூக சுகவாழ்வு சிதைவடைதலால் மக்களுக்கிடையில் பல்வகைமை மேலோங்கிப் பல்வேறு பேதங்கள் உருவாகும். இதனால் சமூகத்தில் ஏற்படக்கூடிய முறையற்ற பெறுபேறு 04 ஐக் குறிப்பிட்டு விளக்குக. **(02 புள்ளிகள்)**

(ii) தொலைக்காட்சி ஊடகத்தில் ஆக்க ரீதியான அறிக்கையிடல்கள் 04ஐத் தந்து 02 ஐ விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iii) அபிவிருத்தித் தொடர்பாடலில் ஏற்படும் சவால்களும் அவற்றைச் சமநிலையில் பகுத்தாய்ந்து வெற்றிகரமாகத் தீர்ப்பதற்குரிய முறைகள் 03 ஐயும் விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iv) அரசியல் எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி ஊடக விமர்சனம் செய்வதற்கு விமர்சகருக்குப் பல்வேறு எண்ணக்கருக்கள் குறித்த தேர்ச்சி வேண்டும். ஊடக விமர்சனத்துடன் தொடர்புடைய அரசியல் செயற்பாடுகளை விமர்சகர் எவ்வாறு கையாளுவார், 04 உதாரணம் தந்து விளக்குக. **(08 புள்ளிகள்)**

தமிழ்ப்பிரிவு – மாதிரி வினாத்தாள்கள்